AKHBAR : TAMIL MALAR

TARIKH : 02.09.2013

M/S : 4

Tamil Malar 02-09-2013 4

# சுதந்திர தினம் பற்றிய டான்ஸ்ரீ மாமுட் அடாமின் நினைவலைகள்



புத்ராஜெயா,செப்.2- சுதந்திர தினம் என்பது எஸ்.பி.ஏ என்ற பொதுச்சேவைத் துறை ஆணையத்திற்கு ஓர் அர்த்தப்பூர்வ மான நாள் என்று இதன் தலைவர் டான்ஸ்ரீ மாமுட் அடாம் அறிவித்துள்ளார். சுதந்திரத் தின் மேன்மையைப் பறைசாற்ற எஸ்பிஏ ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில் இவர் உரை நிகழ்த்தினார். சுதந்திரம் பெற்ற தினத்தன்று அரசியல் சாசனத்தின் 144 (1) பிரிவிற்கு ஏற்ப எஸ்பிஏ என்ற பொதுச் சேவைத்துறை ஆணையம் அமைக்கப்பட்டது. இதன் தலைவர் துணைத் தலைவர் மற்றும் ஆணையத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மாமன்னரால் நியமிக்கப்பட மலாய் ஆட்சியாளர் மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவர்கள். எனவே ஆணையத்தின் பணி முக்கியத்துவ மானவை என்று டான்ஸ்ரீ மாமுட் அடாம் சுட்டிக்காட்டினார்.

ஆணையத்தின் துணைத் தலைவர் டத்தோ ஆர். சேகராஜா, செயலாளர் டத்தோ ரம்லி ஜிகாரி, பொதுச் சேவைத்துறை ஆணையத்தின் சிறப்புப்பணி அதிகாரி, பெருஜி பெருமாள் உட்பட எஸ்பிஏ பணியாளர்கள் பலர் இவ்வைபவத்தில் பங்கேற்றனர்.

இங்கு தேசிய கீதம் பாடப்பட்டது. தேசிய கீதம் என்பது நாட்டின் உயிர்த்துடிப்பு. அனைத்து மக்களையும் ஒட்டவைக்கும் பசை இது. பாடும்போது தேசபக்தி உணர்வு வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஒடுகிறது என்று டான்ஸ்ரீ அடாம் பெருமிதமாக குறிப்பிட்டார்.

தேசத்தை நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் நாட்டை நேசிக்கும் பணியாளர்கள் தேவை.

மண்ணின் நேசம் ஒன்றையே வாசம் செய்த லகாட் டத்து வீரர்களை மறக்கலாகாது என்றார்.

வளர்ச்சி எளிதாக எட்டிவிடவில்லை சுதந்திரத்தின் சுகந்தமான அனுபவங் களை எண்ணிப்பார்ப்போம். இதுகாறும் எஸ்பிஏ என்ற பொதுச்சேவைத்துறை ஆணையம் மொத்தம்56 உருமாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.



பணியில் புதிதாக சேரும் அதிகாரிகள் சிந்தனையினை சீர்படுத்தி அவர்களின் மத்தியில் விரைவா கவும், விசுவாசமாகவும், பொருத்தமாகவும், நேர்மையாகவும் திறந்த மனத்துடன் பணியாற்றி கலாச்சாரத்தைப் போற்றுவது இந்த 56 உருமாற்றுத்திட்டத்தின் நோக்கம்.

வெற்றி என்பது பெற்றுக் கொள் வது தோல்வி என்பது கற்றுக்கொள்வது. முதலில் கற்றுக்கொள்வோம், பிறகு பெற்றுக் கொள்வோம் என்ற மனப்பக்குவத்தை நேர் காணலுக்கு வருகின்றவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்று டான்ஸ்ரீ மாமுட் அடாம் தமதுரையில் அறிவுறுத் தினார்.

TAMIL MALAR, MAKKAL OSAI

02.09.2013

M/S : 15 DAN 4

**Majlis Sempena Bulan Kemerdekaan oleh S.P.A**

Suruhanjaya Perkhidmatan Awam (S.P.A) telah mengadakan Majlis Perutusan Khas Sempena Bulan Kemerdekaan 2013 pada hari Jumaat minggu lepas. Majlis ini bertujuan memupuk semangat patriotik Negara di kalangan warga S.P.A. Pengerusi S.P.A, YBhg. Tan Sri Mahmood Adam, Timbalan Pengerusi, YBhg. Dato' R. Segarajah, Setiausaha YBhg. Datuk Ramli, Pegawai Khas, Encik Perumal dan warga S.P.A telah menghadiri majlis ini dengan penuh semangat patriotik. Lagu-lagu patriotik, mendeklamasi pantun oleh kumpulan koir S.P.A dengan mengibarkan bendera Malaysia turut memeriahkan Majlis Perutusan Bulan Kemerdekaan ini. Dalam ucapan yang disampaikan oleh Pengerusi S.P.A, YBhg. Tan Sri Mahmood Adam,beliau berkata setiap warga S.P.A menyampaikan lagu-lagu patriotik dengan penuh Kemerdekaan dan Kedaulatan Negara dan ini adalah tanggungjawap kita semua sebagai warganegara Malaysia yang bersemangat Negara. Beliau juga turut menekankan mereka yang berjiwa penuh dengan semangat Negara diperlukan untuk menjaga maruah sesuatu negara. Pegawai polis yang sanggup mengorbankan diri di Lahad Datu juga tidak boleh dilupakan.Majli sini diakhiri dengan mengibarkan bendera Malaysia oleh setiap warga S.P.A.

AKHBAR : MAKKAL OSAI

TARIKH : 02.09.2013

M/S : 15

# உனக்கும் எனக்கும் ஒரே வயது



புத்ராஜெயா, செப். 2– சுதந்திர தினம் என்பது எஸ்.பி.எ. என்ற பொதுச்சேவைத் துறை ஆணையத்திற்கு ஓர் அர்த்தப்பூர்வமான நாள் என்று தலைவர் டான் ஸ்ரீ மாமுட் அடாம் அறிவித்துள்ளார்.

சுதந்திரத்தின் மேன்மையை பறைசாற்ற எஸ்.பி.எ. ஏற்பாடு செய்திருந்த வைபவத்தில் இவர் உரை நிகழ்த்தினார். சுதந்திரம் பெற்ற தினத்தன்று அரசியல் சாசனத்தில் 144 (1) பிரிவிற்கு ஏற்ப எஸ்.பி.எ. என்ற பொதுச்சேவைத்துறை ஆணையம் அமைக்கப்பட்டது.

இதன் தலைவர், துணைத் தலைவர் ஆணையத்தின் உறுப்பினர்கள் அனைவரும் மாமன்னரால் நியமிக்கப்பட்டு மலாய் ஆட்சியாளர் மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவர்கள். எனவே ஆலயத்தின் பணி முக்கியத்துவமானவை என்று டான் ஸ்ரீ மாமுட் அடாம் சுட்டிக்காட்டினார்.

ஆலயத்தின் துணைத் தலைவர் டத்தோ ஆர். சேகராஜா, செயலாளர் டத்தோ ரம்லி ஜுகாரி, பொதுச் சேவைத் துறை ஆலயத்தின் சிறப்புப் பணி அதிகாரி பெருஜி பெருமாள் உட்பட எஸ்.பி.எ. பணியாளர்கள் பலர் இவ்வைபவத்தில் பங்கேற்றுள்ளார்.

முன்பு தேசிய கீதம் என்பது நாட்டின் உயிர் துடிப்பு. அனைத்து மக்களையும் ஒட்டவைக்கும் இசை இது. பாடும்போது தேசப்பக்தி உணர்வு வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று டான் ஸ்ரீ மாமுட் அடாம் பெருமிதமாக குறிப்பிட்டார்.

தேசத்தை நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் நாட்டை நேசிக்கும் பணியாளர்கள் தேவை. மண்ணின் நேசம் ஒன்றையே வாசம் செய்த லகாட் டத்து வீரர்களை மறக்கலாகாது என்றார் மாமுட். வளர்ச்சி பெரிதாக எட்டி விடவில்லை.

சுதந்திரத்தின் சுகந்தமான அனுபவங்களை எண்ணிப்பார்ப்போம். இதுகாறும் எஸ்.பி.எ. என்ற பொதுச் சேவைத்துறை ஆணையம் ஆக மொத்தம் 56 உருமாற்றுத் திட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளது.

பணியில் புதிதாக சேரும் அதிகாரிகளின் சிந்தனையினை சீர்படுத்தி இவர்களின் மத்தியில் விசு வாசமாகவும், பொருத்தமாகவும் நேர்மையாகவும் திறந்த மனத்துடன் பணியாற்றும் கலாச்சாரத்தை போற்றுவது இந்த 56 உருமாற்றுத்திட்டத்தின் நோக்கும் போக்கும் வெற்றி என்பது பெற்றுக்கொள்வது.

தோல்வி என்பது கற்றுக்கொள்வது. முதலில் கற்றுக் கொள்வோம் பிறகு பெற்றுக் கொள்வோம் என்ற மனப்பக்குவத்தை நேர்காணலுக்கு வருகின்றவர்கள் கொண்டிருக்க வேண்டும் என்றும் டான்ஸ்ரீ மாமுட் அடாம் தமதுரையில் அறிவுறுத்தினார்.